## ONE TWO ACADEMY

## 12 - ஆம் வகுப்பு

## தமிழ்

## இயல் - 6

**மதிப்பெண்கள்:-50** **கால அளவு: 1.30 மணி நேரம்**

I சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். **10 x 1 = 10**

1. “ஆர்ப்பரிக்கும் கடல் அதன் அடித்தளம்
   மௌனம்; மகா மௌனம் - அடிகள் புலப்படுத்துவது
   அ) இரைச்சல் ஆ) குறை குடம் கூத்தாடும்
   இ) நிறைகுடம் நீர்த்தழும்பல் இல் ஈ) புற அசைவுகள் அகத்தினை அசைக்க இயலாது.
2. பொருத்துக.
   அ) ஆமந்திரிகை - 1) பட்டத்து யானை
   ஆ) அரசு உவா - 2) மூங்கில்
   இ) கழஞ்சு - 3) இடக்கை வாத்தியம்
   ஈ) கழை - 4) எடை அளவு
   அ) 3142 ஆ)4213 இ)1234 ஈ) 4321
3. வேறுபட்டதைக் குறிப்பிடுக.
   அ) அண்மைக் காட்சித் துணிப்பு ஆ) சேய்மைக் காட்சித் துணிப்பு
   இ) நடுக் காட்சித் துணிப்பு ஈ) காட்சி மறைவு
4. ஐம்பெருங்காப்பியம் என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர்
   அ) சிவஞான முனிவர் ஆ) மயிலைநாதர்
   இ) ஆறுமுகநாவலர் ஈ) இளம்பூரணர்

5. தவறான இணையைத் தேர்க

பாவகை இலக்கியம்

அ) விருத்தப்பா - நாலடியார்

ஆ) ஆசிரியப்பா - அகநானூறு

இ) கலிவெண்பா - தூது

ஈ) குறள்வெண்பா - திருக்குறள்

6. ஏழ் ஆண்டு இயற்றி ஓர் ஈராறு ஆண்டில் சூழ்கழல் மன்னற்குக் காட்டல்... தொடர்களில் வெளிப்படும் செய் திகள்

1. மாதவி ஏழு ஆண்டுகள் வரை நாட்டியம் பயின்றாள்.

2. ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விரும்பினாள்.

அ) 1 சரி 2 தவறு ஆ) 1 தவறு 2 சரி

இ) 1 தவறு 2 தவறு ஈ) 1 சரி 2 சரி

7. ‘சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்’ என்று குறிப்பிடுபவர்

அ) திரு.வி.க. ஆ) பாரதி

இ) பாரதிதாசன் ஈ) ம.பொ.சி.

8. அல்லல் படுப்பதூம் இல் - எவரோடு பழகினால்?

அ) வான்போல் பகைவர் ஆ) மெய்ப்பொருள் காண்பவர்

இ) எண்ணியாங்கு எய்துபவர் ஈ) தீயினத்தார்

9. திண்ணியர் என்பதன் பொருள் தருக.

அ) அறிவுடையார் ஆ) மன உறுதியுடையவர்

இ) தீக்காய்வார் ஈ) அறிவினார்

10. நடுங்கும்படியான துன்பம் யாருக்கில்லை?

அ) வரப்போவதை முன்னரே அறிந்து காத்துக் கொள்ள கூடியவர்

ஆ) மனத்திட்பம் உடையவர்

இ) அரசரைச் சார்ந்து வாழ்கின்றவர்

ஈ) சூதாடுமிடத்தில் காலம் கழிப்பவர்

II எவையேனும் எட்டு வினாக்களுக்கு விடை அளிக்கவும் 8 X 2 = 16

11.பாவிகம் - விளக்குக.

12.எண்வகை மெய்ப்பாடுகள் யாவை?

13.ஒருமுக எழினி, பொருமுக எழினி - குறிப்பு எழுதுக.

14.காப்பியத்தைக் குறிக்கும் பிற பெயர்கள் யாவை?

15.பின்னணி இசை படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக

16.'மூச்சு நின்று விட்டால் பேச்சும் அடங்கும்' - கவிதைக்குப் பொருத்தமான பழமொழி ஒன்றை எழுதுக.

17.காப்பியம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

18.காப்பியச் சிற்றுறுப்புகள் சிலவற்றை எழுதுக

19.கீழ்க்காணும் தொடர்களில் அடைப்புக்குள் உள்ள பெயர்ச்சொல்லைத் தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக.

I. நேற்று முதல் ___________ (அணை) நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

II. உங்களுக்கு ___________ (யார்) நன்மை என நினைக்கிறீர்கள்.

20.பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க.

I. புல் - புள் II. உழை - உளை

III எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை அளிக்கவும் 2 X 4 = 8

21.நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.

22.திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்கா ட்டுடன் புலப்படுத்துக.

23.கவிதை என்பது கண்முன் நிகழ்வதையும் மனதில் நிகழ்வதையும் தொடர்புபடுத்திச் சொற்சிமிழில் அடைக்கும் முயற்சியே என்பதை நகுலன் கவிதையைக் கொண்டு நிறுவுக.

**IV எவையேனும் ஒரு வினாவிற்கு விடை அளிக்கவும். 1 X 8 = 8**

24.உங்கள் ஊர்ப் பகுதியில் வாழும் கலைஞர் ஒருவரை நேரில் பார்த்த அனுபவத்தை விவரித்துக் கட்டுரையாக்குக.

25.ஏதேனும் நான்கு மெய்ப்பாடுகள் தோன்றுவதற்கான சூழ்நிலையைக் கற்பனையாகப் படைக்க.

**V எவையேனும் ஒரு வினாவிற்கு விடை அளிக்கவும். 1 X 8 = 8**

26.திரைப்படத்துறை என்பது ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலா? அல்லது கலைகளின் சங்கமமா? உங்கள் பார்வையை க் கட்டுரையாக்குக.

27.மகாநடிகரைக் கண்ட பாலசந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.